செய்தி வெளியீடு எண்:576 நாள் :20.10.2013

# செய்தி வெளியீடு

தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருவது ஓர் உயரிய நோக்கமாகும்.

விளை நிலங்களுக்கு போதிய நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய இயலும் என்பதால் அதற்கான பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

காவேரி டெல்டா பகுதியில் பல இடங்களில் நதிகள் மற்றும் கால்வாய்களில் அரிப்பு ஏற்பட்டு அதனால் ஆறுகளின் படுகை மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. இதனால், கால்வாய்களிலிருந்து கிளைக் கால்வாய்களுக்கு போதுமான நீர் செல்ல இயலாத நிலை உருவாகிறது. எனவே, காவேரி ஆறு மற்றும் அதன் கிளை நதிகள் மற்றும் வடிகால்களின் படுகை மட்டத்தை அதன் சுயமட்டத்திற்குக் கொண்டு வந்து, அதன் மூலம் விவசாயிகளுக்கு உரிய பாசன வசதி அளித்திட ஏதுவாக தரை மட்ட சுவர்களை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன் அடிப்படையில், தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டத்தில் கூத்தூர், கோனேரிராஜபுரம் மற்றும் திருச்சோற்றுத்துறை என மூன்று இடங்களில் 3 தரைமட்டச் சுவர், பாபநாசம் வட்டத்தில் ராமராஜபுரம், உக்கடை என இரண்டு இடங்களில் 2 தரைமட்டச் சுவர், திருவிடைமருதூர் வட்டத்தில் மணலூர், அரலூர், கூத்தனூர் மற்றும் குறிச்சி என நான்கு இடங்களில் 4 தரைமட்டச் சுவர், தஞ்சாவூர் வட்டத்தில் பிரம்மன்பேட்டையில் 1 தரைமட்டச் சுவர், பட்டுக்கோட்டை வட்டத்தில் சிரமேல்குடியில் 1 தரைமட்டச் சுவர் என மொத்தம் 11 தரைமட்டச் சுவர் அமைப்பதற்கும், தஞ்சாவூர் வட்டத்தில் அய்யனாபுரம், சஞ்சீவிபுரம், தொண்டராயன்பாடி, கல்விராயன்பேட்டை, வண்ணாரப்பேட்டை, வரவுகோட்டை என ஆறு இடங்களில் 6 தடுப்பணைகள், பட்டுக்கோட்டை வட்டத்தில் திட்டக்குடி, நரசிங்கபுரம், வேப்பன்குளம், மூத்தக்குறிச்சி, வட்டக்குடி என ஐந்து இடங்களில் 5 தடுப்பணைகள், ஒரத்தநாடு வட்டத்தில் அரசுதிப்பட்டு, அரசப்பட்டு, சின்னபொன்னாப்பூர், சடையார்கோவில், வாண்டையார்யிருப்பு ஆகிய இடங்களில் 3 தடுப்பணைகள் என 14 தடுப்பணைகள் என 25 பாசன கட்டுமான அமைப்புகளை தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக 67 கோடியே 68 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

பெரம்பலூர் மாவட்டத்தில் பாயும் மருதையாற்றில் பருவமழைக் காலங்களில் மட்டுமே அதிக அளவு தண்ணீர் ஓடுகிறது. எனவே மருதையாற்றில் பருவக் காலங்களில் மட்டுமே வரும் தண்ணீரை முறையாக தேக்கி வைப்பதன் மூலம், அம்மாவட்டத்திலுள்ள விவசாய நிலங்களுக்கு உரிய பாசன வசதி தொடர்ந்து அளிக்க இயலும். இதற்காக, மருதையாற்றின் குறுக்கே 211.58 மில்லியன் கன அடி கொள்ளளவுடனும், 2 நிரப்புகளில்

423.16 மில்லியன் கன அடி ஆண்டு கொள்ளளவுடன் கூடிய நீர்த்தேக்கம் ஒன்றினை ஆலத்தூர் வட்டம் கொட்டரை கிராமம் அருகே அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டத்தினை செயல்படுத்த 108 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள கொட்டரை, ஆதனூர், கூத்தூர், புஜங்கராயநல்லூர், நொச்சிக்குளம், தொண்டப்பாடி, அழகிரிபாளையம், அரியலூர், கூடலூர், சாத்தனூர் ஆகிய 10 கிராமங்களிலுள்ள 4,194 ஏக்கர் புன்செய் நிலம் பாசன வசதி பெறும்.

பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள காலிங்கராயன் கால்வாய் மிகவும் பழமையான ஒன்றாகும். இக்கால்வாய் பவானி ஆறு காவேரியில் சேரும் பகுதியில் மேற்புறம் தொடங்கி 56 மைல் ஒடி, 15,743 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கின்றது. அருகிலுள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் இந்த கால்வாய் மாசுபடுகிறது.

எனவே கழிவுநீர் ஆற்றுடன் கலப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, இந்தக் கால்வாயை சீரமைக்க, முதற்கட்டமாக இந்த கால்வாயின் 3.3 மைல் முதல் 9.7 மைல் வரை உள்ள பகுதியை புனரமைத்து ஒரு பேபி கால்வாயை ஏற்படுத்தி அதன் மூலம் கழிவுநீர் கால்வாயில் விழாதபடி தடுக்கும் திட்டம் ஏற்கெனவே 50 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது, இரண்டாவது கட்டமாக காலிங்கராயன் வாய்க்காலினை 0.0 மைல் முதல் 3.3 மைல் நீளத்திற்கு 41 கோடி ரூபாய் செலவில் புனரமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டம் தாங்கு சுவர், படுகை பூச்சு, புதிய பேபி கால்வாய் உருவாக்கம், ஆய்வுப் பாதையில் வலதுபுறம் வழிநடை அமைத்தல், காலிங்கராயன் அணைக்கட்டைப் பலப்படுத்துதல், பாலங்களை சீரமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள அழகிய மணவாளம் ஊராட்சியின் கீழ் 6 கிராமங்கள் உள்ளன. அதில் மேலராமநல்லூர் மற்றும் கீழராமநல்லூர் ஆகிய கிராமங்கள் கொள்ளிடம் ஆற்றில் ஒரு தீவுப்போல் அமைந்துள்ளன. இதனால், வெள்ளக் காலங்களில் மாவட்டத்தின் பிற பகுதிகளிலிருந்து இந்த இரு கிராமங்களும் துண்டிக்கப்படுகின்றன. இத்தருணங்களில், இக்கிராமங்களில் உள்ள மக்கள் 45 கி.மீ. தூரம் சுற்றி அரியலூர் மற்றும் கும்பகோணம் பகுதியில் உள்ள பள்ளி, கல்லூரி, அலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு செல்ல வேண்டியுள்ளது. மேலும், போதுமான உயர்மட்ட பாலம் இல்லாத காரணத்தால் மீட்புப் பணிகளை மேற்கொள்வதில் தொய்வு ஏற்படுகிறது.

இப்பகுதி மக்களின் இன்றியமையாத இத்தேவையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கொள்ளிடம் ஆற்றில் தீவாக அமைந்துள்ள ராமநல்லூர் கிராமத்தினை அழகிய மணவாளம் கிராமத்துடன் இணைக்கும் வகையில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, 48 கோடி ரூபாய்

செலவில் உயர்மட்ட பாலம் அமைப்பதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து உத்தரவிட்டுள்ளார்கள். இந்த உயர்மட்ட பாலம் அமைப்பதன் மூலம் மேலராமநல்லூர் மற்றும் கீழராமநல்லூர் கிராமங்கள் அழகிய மணவாளம், எழக்குறிச்சி, வல்லக்குறிச்சி, தூத்தூர், குருவாடி, டி.பாலூர், முத்துவாஞ்சேரி மற்றும் அரியலூர் நகரத்துடன் இணைக்கப்படும்.

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காகங்கரை ஏரிக்கு குத்தூர் ஏரியிலிருந்து ஒரு புதிய வழங்கு வாய்க்கால் அமைக்கும் பணியை நிறைவேற்றுவதற்காக 2 கோடியே 71 லட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் 218 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும், காகங்கரை ஏரியை ஒட்டியுள்ள ஆயக்கட்டு நிலங்கள் மற்றும் சின்னப்பநாயக்கன் ஏரி, குடியன்குட்டை ஏரி, குள்ளன்குட்டை ஏரி, பரதேசிப்பட்டி ஏரி ஆகிய ஏரிகளின் ஆயக்கட்டுப் பகுதிகளும் பாசன வசதி பெறும்.

காவேரி டெல்டா பகுதிகளில் குறிப்பாக, திருவாரூர் மாவட்டத்தில் மேட்டூர் அணையிலிருந்து காவேரி நீர் திறந்துவிடப்படாத காலங்களில், காவேரி மற்றும் வெண்ணாறு உப வடிநிலங்களில் நிலத்தடி நீரினைக் கொண்டு விவசாய பெருமக்களால் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு, பருவமழை பொய்த்ததன் காரணமாகவும், கர்நாடகா தமிழ்நாட்டிற்கு காவேரியில் உரிய பங்கு நீரை திறந்துவிடாததாலும், காவேரி மற்றும் வெண்ணாறு உப வடிநிலங்களில் அதிக அளவு நிலத்தடி நீரை பயன்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் நிலத்தடி நீரின் அளவு வெகுவாக குறைந்துள்ளது. இந்த நிலையை தவிர்க்க, விஞ்ஞான ரீதியாக நிலத்தடியில் உள்ள நீர்தாங்கிகளை செறிவூட்ட நடவடிக்கை எடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளாாகள்.

இதன்படி, திருவாரூர் மாவட்டத்திலுள்ள காவேரி மற்றும் வெண்ணாறு உப வடிநிலங்களில், செயற்கை முறையில் நிலத்தடிநீர் செறிவூட்ட காவேரி உப வடிநிலங்களில் 660 மற்றும் வெண்ணாறு உப வடிநிலங்களில் 675 என 1,335 செயற்கை முறை நிலத்தடி நீர் செறிவூட்டு துளைக் கிணறுகள் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக 19 கோடியே 81 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த உத்தரவின் மூலம் 287 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 20.10.2013.